பிலேமோன்

பவுல் காவலில் இருந்த பொழுது ஒநேசிமு என்பவனுடன் பழகி, அவனைக் கர்த்தரிடம் வழிநடத்தினார் (பிலேமோன் 10). ஒநேசிமு தனது எஜமானாகிய பிலேமோனிடமிருந்து தப்பி ஓடிய ஓர் அடிமை. பிலேமோன் பவுலை அறிந்திருந்தான். ஒரு வேளை பவுல் எபேசுவில் இருந்த பொழுது பிலேமோன் கிறிஸ்தவனாகியிருக்கக் கூடும். அவனுடைய வீடு கொலோசெயில் (அல்லது லவோதிக்கேயாவுக்கு சமீபத்தில்) இருந்திருப்பதாகத் தெரிகிறது. அங்கிருந்த சபையில் அவன் அங்கத்தினனாயிருந்தான் (பிலேமோன் 1:2; கொலோசெயர் 4:17). பவுல் (பிலேமோனுக்கு) ஒரு கடிதத்தைக் கொடுத்து ஒநேசிமுவை மீண்டும் அவன் எஜமானிடம் அனுப்பினார். அவனை மன்னிக்கும்படிக்கும் பிலேமோனிடம் மன்றாடினார்.

ஆதிக்கிறிஸ்தவர்களில் அநேகர் வாழ்ந்த சமுதாயத்தின் தோற்றத்தை பிலேமோன் நிருபம் நமக்களிக்கிறது. அடிமைகளை வைத்திருக்கும் பழக்கம் சாதாரணமாயிருந்தது. புதிய ஏற்பாட்டு காலங்களில் ரோம சாம்ராஜ்யமெங்கும் ஆறு மில்லியன் அடிமைகள் இருந்திருக்கக் கூடுமென வரலாற்று ஆசிரியர்கள் சிலர் மதிப்பிட்டுள்ளனர். ரோமரின் பிரமாணத்தின்படி, எஜமான் ஒருவன் தனது அடிமையைத் தன் விருப்பம் போல நடத்தலாம். அடிமை எஜமானுக்கு ஏதேனும் இடையூறு செய்தால், எஜமான் அவனை எந்த அளவுக்கும் கொடுமையாகத் தண்டிக்கலாம், அவனைக் கொலையும் செய்யலாம்.

தனது வேறு சில நிருபங்களில், அடிமைகளுக்கும், எஜமான்களுக்கும் இருக்க வேண்டிய உறவைப் பற்றிய அறிவுரைகளைப் பவுல் வழங்குகிறார் (எபேசியர் 6:5-9)

இருப்பினும், வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்கி, முடிவில் கிறிஸ்தவர்களிடையே ஒட்டுமொத்தமாக அடிமைப் பழக்கத்தை ஒழிக்கக் கூடிய கோட்பாடுகளான அன்பையும், சகோதரத்துவத்தையும் சுவிசேஷம் அறிமுகப் படுத்திற்று. பவுல் இதை உணர்ந்திருந்தார் என்பதில் ஐயமில்லை. நாம் 1 கொரிந்தியர் 7:21-23 வசனங்களில் பார்ப்பது போல, பவுல் சுயாதீனத்தைப் பெரிதும் மதித்தார். பிறரும் சுயாதீனராகக் கூடுமானால் அவ்விதமே செய்யும்படி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

பவுல் பிலேமோனுக்கு எழுதின கடிதத்தில், ஒநேசிமுக்குப் பிலேமோன் சுயாதீனம் கொடுப்பதை பவுல் எதிர்பார்ப்பதாக, மறைமுகமாகக் குறிப்பிடுகிறார் (வசனம் 14,21). இருந்த போதிலும், பிலேமோன் நிருபம் உட்பட பவுலின் எல்லா நிருபங்களின் உடனடி நோக்கமும், வெளியரங்கமான சமுதாய மாற்றத்தை வலியுறுத்துவதாக இருக்கவில்லை. விசுவாசிகளின் வாழ்க்கை எவ்வளவு கடினமாக இருந்தாலும், அவர்களுடைய நிகழ்கால சூழ்நிலையின் மத்தியில் சுவிசேஷத்திற்காக ஜீவிக்க வேண்டுமென்று அவர்களுக்குப் பவுல் புத்திமதி கூறினார்.

கடுமையான குற்றங்கள் புரிந்த சூழ்நிலையிலும், எவ்விதம் கிறிஸ்தவ மன்னிப்பை செயல்படுத்தக் கூடுமென்பதற்கு, பிலேமோனுக்கு எழுதிய நிருபம் அழகான, நடைமுறை எடுத்துக்காட்டாகும். மேலும், புறஜாதிகளின் பிரதான அப்போஸ்தலனாகிய பவுலின் நடத்தையின் உள்ளுணர்வையும் நமக்குப் புலப்படுத்துகிறது

பிலேமோன்

அவருக்குள்ளிருந்த கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம், முழு சமுதாயத்தாலும் புறக்கணிக்கப்பட்டு, அற்பமாய் எண்ணப்பட்ட, தப்பியோடிய அடிமையை ஆதாயப்படுத்திக் கொண்டார். அவனைக் கர்த்தருக்குள் வழிநடத்தி, அவனுக்காக சாதுரியமாகவும், உறுதியாகவும் பரிந்துபேசி, அவனுடைய கடனையும் தன் மேல ஏற்றுக் கொண்டார்.

பிலேமோன்:- கிறிஸ்தவ மன்னிப்பின் செயல்முறை

1. பவுலின் வாழ்த்துக்கள் (வசனம் 1-3).
2. பிலேமோனுக்குப் பவுல் நன்றி நவிலல் (வசனம் 4-7).
3. ஒநேசிமுக்காகப் பவுலின் மன்றாட்டு (வசனம் 8-21).
4. பவுலின் வேண்டுகோளும், முடிவுரையும் (வசனம் 22-25).

பவுல் தனது தனிப்பட்டக் கோரிக்கையை பிலேமோனுக்கு அனுப்பினார். அவர் கொலோசே சபைக்கும், எபேசுவின் பகுதியிலிருந்த சபைகளுக்கும் எழுதிய கடிதங்களை தீகிக்கு என்னும் விசுவாசியின் மூலம் கொடுத்து அனுப்பினார். ஒநேசிமு தனது எஜமானாகிய பிலேமோனின் வீடு வரைக்கும் தீகிக்குடன் சென்றான். (கொலோசெயர் 4:7-9; எபேசியர் 6:21,22).

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. நான்கு "காவல் நிருபங்கள்" (பிலேமோன், எபேசியர், கொலோசெயர், பிலிப்பியர்) ரோமாபுரியில் பவுல் காவலில் இருந்த பொழுது எழுதப்பட்டன.

2. கிறிஸ்தவ மன்னிப்பை, குறிப்பாக, மிகவும் கடுமையான குற்றம் புரிந்தவர்களையும் மன்னிக்கும் செயல்முறை எடுத்துக் காட்டாக, பிலேமோன் நிருபம் விளங்குகிறது. மேலும், கடும் குற்றஞ் செய்தவர்களையும் கிறிஸ்தவர்கள் எவ்வாறு சகோதரர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் இந்நிருபம் வெளிப்படுத்துகிறது.

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

முன்னுரை

அ. அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷத்திற்காக, ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும் போது, பிலேமோனுக்கு எழுதின நிருபத்தை எழுதினார் என்று பெரும்பாலான வேத பண்டிதர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். (அப்போஸ்தலர் 28:16-31). அவருக்குச் சொந்தமான இந்த கடிதமும், கொலோசே பட்டணத்திலுள்ளவர்களுக்கு பவுல் எழுதின நிருபமும் ஒநேசிமு மற்றும் திகிக்கு என்பவர்கள் மூலம், கொலோசே பட்டணத்திலுள்ளவர்களிடம் கொடுக்கப்பட்டது (கொலோசெயர் 4:7-9). ஆகவே, இந்த நிருபம் எழுதப்பட்ட காலம், பவுல் கொலோசே பட்டணத்தாருக்கு எழுதின நிருபத்தின் காலத்திற்கு ஒத்தது. (கி.பி. 58-60)

ஆ. பிலேமோனுக்கு எழுதின இந்தக் கடிதத்தில், கிறிஸ்துவுக்குள் அவர் புதிதாக கண்டுபிடித்த சகோதரனுக்கு கருணை காட்டும்படி மன்றாடுகிறார். (வசனம் 10). பிலேமோனுக்குச் சொந்தமான ஒநேசிமு என்ற அடிமை, அவனுடைய எஜமானை விட்டு கள்ளத்தனமாக, திருடிவிட்டு, தன் ஜீவனைக்காக்க ஓடிவிட்டான் (வசனம் 18). அவன், எப்படியோ ரோமாபுரியில் கண்டுபிடிக்கப்பட்டு, பவுல் முதல் முறை சிறையாக்கப்பட்ட போது, சிறையிலிருந்து கிறிஸ்துவின்பக்கமாக இரட்சிக்கப்பட்டான்.

இ. பவுல் ஒநேசிமுக்காக மன்றாடுவது வசனம் 8-21., காணப்படுகிறது. இதில் கொடுக்கப்பட்ட, முன்னுரை, நன்றி கூறும் சொற்கள், கடிதத்தின் முடிவுரை ஆகிய இவை யாவும், ஒநேசிமுவுக்குக் கருணை காட்டுவதற்குரிய மன்றாட்டின் முக்கியத்துவத்தை அழுத்திக் கூறுவதற்காக வடிவமைக்கப்பட்டதாகக் காணப்படுகிறது.

1. முன்னுரை (வசனம்1-3)

அ. வசனம் 1. "கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும் ---" இந்த வாழ்த்துச் சொற்கள் தனிச் சிறப்பு வாய்ந்தது. சாதாரணமாக, அவனுடைய நிருபங்களில் பவுல் தன்னை, "இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல்" என்று அறிமுகப்படுத்துவார். (ரோமர் 1:1; எபேசியர் 1:1; கொலோசெயர் 1:1; 1தீமோத்தேயு 1:1; 2தீமோத்தேயு 1:1; தீத்து 1:1) இங்கே, "இயேசு கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல்," என்று தன்னை அறிமுகப்படுத்துகிறார். வாழ்த்துக் கூறுவதில் தீமோத்தேயுவையும் சேர்த்து கூறுவதிலிருந்து, (மற்ற சந்தர்ப்பங்களிலும் அவர் செய்வது போல) ஒநேசிமுவுக்காக பிலேமோனிடம், பவுலுடன் சேர்ந்து தீமோத்தேயுவும் மன்றாடுவது போல் காணப்படுகிறது.

ஆகவே, பவுலுடன் சேர்ந்து துன்பப்படும், வாலிபர் யாவராலும் நன்றாக அறியப்பட்ட, தூர இடங்களுக்கு அனுப்பப்படும் போதகரும், சுவிசேஷ ஊழியத்தில் பவுலுடைய நெருங்கிய உடன் ஊழியக்காரனுமாகிய தீமோத்தேயு, பவுலுடன் சேர்ந்து அவனுடைய வேண்டுதலைச் செய்கிறான்.

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

ஆகவே ஒநேசிமுவைக் குறித்து மூன்று பேர் ஒருமனப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (உபாகமம் 17:16; 19:15; மத்தேயு 18:20; 1தீமோத்தேயு 5:19; 1யோவான் 5:7)

ஆ. வசனம் 2. "பிலேமோனுக்கும் --- அப்பியாளுக்கும் --- அர்க்கிப்புவுக்கும் --- சபைக்கும் ---" முதலாவது இந்த நிருபம், சொந்த தனிப்பட்ட நபராகிய, அடிமைகளின் உரிமையாளரும், பவுல் மற்றும் தீமோத்தேயுவுடைய பிரியமான நண்பரும், உடன் ஊழியக்காரனுமாகிய (சுவிசேஷம் அறிவிப்பதில்) பிலேமோனுக்கு எழுதப்பட்டது. ஆகிலும் கடிதத்தின் முன்னுரையில் பவுல் கீழ்க்கண்டவர்களையும் சேர்த்துக் கொள்ளுகிறார்:

1. அப்பியாள் - பிலேமோனின் மனைவி, மற்றும் இந்த நிருபம் எழுதப்பட்ட கால வழக்கப்படி, வீட்டிலுள்ள எல்லா அடிமைகளையும் எப்போதும் மேற்பார்வை செய்கிறவள். அவள் ஒரு கிறிஸ்தவளாகவும் இருந்தாள். பவுல், அவளை "சகோதரி" என்று அழைக்கிறார்.

2. அர்க்கிப்பு - ஒரு சமயம், பிலேமோனுடைய குமாரனாக இருக்கக் கூடும். உண்மையில், கொலோசே பட்டணத்திலுள்ள அவனுடைய வீட்டில் கூடின சபைக்கு ஆவிக்குரிய தலைவனாக (ஒரு வேளை போதகராக) இருந்தான். (கொலோசெயர் 4:17) இக்காரணத்தினால்தான், பவுல், "உடன் போர்ச்சேவகன்" (சுவிசேஷம் அறிவிப்பதில்) என்று அவனை அழைக்கிறார்.

3. சபை - இது கொலோசே பட்டணத்திலுள்ள எல்லா விசுவாசிகளையும் சேர்த்து கூறப்படுகிறது. அவருடைய வாழ்த்துதலில், சிறையில் இருந்த, அவருடைய உடன் ஊழியனாகிய தீமோத்தேயுவை எவ்வாறு சேர்த்துக் கொண்டாரோ, அவ்விதமாகவே, அப்பியாளையும், அர்க்கிப்புவையும், சபை அங்கத்தினர்கள் யாவரையும் ஒநேசிமுவுக்காக செய்கிற மன்றாட்டை ஆதரிக்கும்படியாகச் சேர்த்துக் கொண்டார். இப்பொழுது, ஆறு நபர்கள், ஒநேசிமுவுக்காக ஒரு மனப்பட்டு இணங்கி வருகிறார்கள்.

இ. வசனம் 3. "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக." இந்த வாழ்த்துக்கள் தனிப்பட்ட முறையில் பிலேமோனுக்கும், அவ்வாறே சபை முழுவதற்கும் குறிப்பிடப்படுகிறது. "கிருபை", என்றால், தயவுபெறுவது, ஆவியில் சந்தோஷப்பட்டுக் களிகூருவது; ஆவியில் நல்ல முறையில் வாழ்வது, என்று பொருள்படும். "சமாதானம்" என்றால் நல்ல வளமான வாழ்வு பெறுவது, சமாதானத்தோடு ஐக்கியப்படுவது, பயமின்றி அமைதியாயிருப்பது, இளைப்பாறுவது, பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து, பிரிக்கப்படாத பூரண ஆளுமையை வரமாகப் பெற்றுக் கொள்வது என்று பொருள்படும்.

2. நன்றி செலுத்துவது (வசனம் 4-7)

அ. வசனம் 4-6. "--- உம்முடைய அன்பையும் விசுவாசத்தையும், நான் கேள்விப்பட்டு என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்போதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்து ---"

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

இங்கே, வசனம் 3 மற்றும் இந்த நிருபத்தின் மற்ற இடங்களிலும், ஆனால் வசனம் 22,25 தவிர்த்து, "உன்னை, உன்னுடைய" என்று பிலேமோனை தனிப்பட்ட முறையில், ஒருமையில் குறிப்பிடுகிறார். பவுல் அவர் ஸ்தாபித்த மற்ற சபைகள் மற்றும் சபையிலுள்ள விசுவாசிகளைப் போலவே, பிலேமோனையும் அவருடைய ஜெபங்களில், "நினைத்து எப்போதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்" என்று கூறுகிறார். (பிலேமோன் 1:3-4; ரோமர் 1:8; 1கொரிந்தியர் 1:4; கொலோசெயர் 1:3; 1தெசலோனிக்கேயர் 1:2 முதலியன)

ஆ. பிலேமோனை, அவருடைய ஜெபங்களில் நினைக்கும் போது, பவுல் இரண்டு காரணங்களுக்காகத் ஸ்தோத்திரம் செய்கிறார்.

1. பிலேமோனுக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் - "கிறிஸ்துவில் விசுவாசம்" இடைவிடாமல் எப்போதும் இரட்சிப்புக்காக கிறிஸ்துவை நம்பியிருப்பது (விடாபிடியாக சார்ந்து பற்றுவைப்பது) இதன் விளைவாகவே மற்றவர்கள் மீது பிலேமோன் அன்பு காட்டுவதற்கு, அடிப்படையாக அமைய காரணமாயிருந்தது. (கலாத்தியர் 5:6; 1தெசலோனிக்கேயர் 1:3; யாக்கோபு 2:2022)

2. "எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பை ---" "அன்பு" என்றால், மற்றவர்கள் மீது "பாசம்", "தயவு" இரக்கம், பாராட்டுதல் என்று பொருள்படும். ஒருவன் கிறிஸ்து தன் மீது எவ்வளவு அதிகமாக அன்பு பாராட்டியிருந்தார் என்றும் இப்பொழுதும், மற்றும் அந்த அன்பு நித்தியமான நன்மைகளைத் தரப்போகிறதென்றும் அறிந்தானானால், அவன் மற்றவர்களை அதே வண்ணமாகவும், அதே ஊக்கத்துடனும் அன்புகூர வேண்டுமென்று விளங்கிக் கொள்ளுவான். (வசனம் 6; யோவான் 15:12-13)

இ. வசனம் 7. பிலேமோனுடைய விசுவாசத்தையும் அன்பையும் குறித்துக் கேள்விப்பட்டது பவுலுக்கு மிகுந்த சந்தோஷத்தையும், (ஆவியில் திருப்தியும், மகிழ்ச்சியும்) ஊக்கத்தையும், (மன ஆறுதலையும், தேறுதலையும்) கொடுத்தது மற்றும் பரிசுத்தவான்களுடைய இருதயங்களை (உள்ளப்பூர்வமான பாசம் மற்றும், மென்மையான பாச உணர்வுகளையும்) உற்சாகப்படுத்தினது. (இளைப்பாறுதலையும், அமைதியையும் அளித்தது) ஒநேசிமுவுக்காக அவனுடைய மன்றாட்டிற்கு இதுவே பிலேமோனுடைய பதிலாக இருக்கும் என்று பவுல் உறுதியாயிருப்பதற்கு, இது உதவியாய் இருக்கும் என்று சொல்லாமலே, கிடைத்தது!

3. நிருபத்தின் முடிவுரை (வசனம் 22-25)

அ. வசனம் 22. "மேலும்", இந்தப் பாடத்தில், நிருபத்தின் முடிவுரையும் வைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், ஒநேசிமுவுக்காக பவுலுடைய மன்றாட்டில், முன்னுரை மற்றும் நன்றி கூறினவைகளுடன், இதுவும் (முடிவுரை) சேர்ந்து அதன் முக்கியத்துவத்திற்கு அழுத்தத்தைக் கூட்டுகிறது. கொலோசே பட்டணத்தில் அவர் இருக்கும்போது, தங்குவதற்கு, அவருடைய வீட்டில், ஒரு விருந்தினர் அறையை ஆயத்தப்படுத்தும்படி, பிலேமோனிடம் கேட்கும் அளவிற்கு, பவுல், சிறையிலிருந்து தான் விடுவிக்கப்படப்போவதைக் குறித்து அவ்வளவு நிச்சயத்துடன் இருந்தார். இதுவும் பவுலுடைய மன்றாட்டிற்கு அழுத்தத்தைக் கூட்டுவதாக இருக்கிறது.

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

ஒநேசிமு மன்னிக்கப்பட்டு, "அடிமையானவனாகவல்ல, சகோதரனாக", பிலேமோனுடைய குடும்பத்திற்கு மீட்கப்பட்டவனாகச் சேர்த்துக் கொள்ளப்படுவான் என்பதற்குச் சந்தேகமில்லை, பவுலும் அவனுடைய சொந்தக் கண்களால் அதைப் பார்ப்பான்! (வசனம் 16)

ஆ. வசனம் 22. "--- உங்கள் விண்ணப்பங்களினாலே, நான் உங்களுக்கு அநுக்கிரகிக்கப்படுவேனென்று நம்பியிருக்கிறபடியால் ---" "நம்பியிருக்கிறபடியால்" என்றால், எதிர்பார்ப்பது அல்லது உறுதியாயிருப்பது என்று பொருள்படும். "அநுக்கிரகிக்கப்படுவேன்" என்றால் மீட்கப்படுவது, விடுவிக்கப்படுவது அல்லது மன்னிக்கப்படுவது என்று பொருள்படும். ரோமாபுரியில் அவருடைய முதல் சிறையிருப்பிலிருந்து சீக்கிரம் விடுதலைபெற்று, கொலோசே பட்டணத்திலுள்ள சகோதரர்களுடன் சேர்ந்து கொள்வார் என்று பவுல் உறுதியாயிருந்தார். (பிலேமோன் 25-26).

புதிய ஏற்பாட்டின் விசுவாச வீரனாகிய பவுல், அவனுக்கும், அவனுடைய சக விசுவாசிகளுக்கும், ஊழியத்திற்கும் உதவி செய்யும்படி, பிதாவின் கரத்தை அசைக்கப் பரிசுத்தவான்களின் ஜெபத்தை சார்ந்திருக்க வேண்டியதாயிருந்ததைப் பார்க்கும்போது, ஆர்வத்தை அது தூண்டிவிடுவதாக இருக்கிறது. (2கொரிந்தியர் 1:11; பிலிப்பியர் 1:19; 1தெசலோனிக்கேயர் 5:25; எபேசியர் 6:19) உண்மையில், பிலேமோனும் (அவருடைய ஊழியத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு மனந்திரும்பி வந்தவன் வசனம் 19) கொலோசே பட்டணத்தில் உள்ள சபையும், அவர்களுடைய ஜெபங்களில் எப்போதும் அவனையும் சேர்த்துக் கொள்ளுவார்கள் என்று உறுதியாக நம்பியிருந்தான்.

இ. வசனம் 23-24. " --- எப்பாப்பிராவும் --- மாற்குவும், அரிஸ்தர்க்கும், தேமாவும், லூக்கா --- அவர்களுடைய வாழ்த்துக்களை அனுப்பின இந்த ஐந்து உடன் ஊழியர்களும் (பவுலுடைய மன்றாட்டிற்கு மேலும் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தது) கொலோசேயர் நிருபத்திலும் கூறப்படுகிறார்கள். (கொலோசெயர் 4:10-14) கொலோசே சபையிலிருந்து சுவிசேஷ ஊழியத்திற்காக எப்பாப்பிரா அனுப்பப்பட்டவனாயிருந்ததினால், அவனைத் தனிப்படக் குறிப்பிட்டுக் கூறியிருக்கக் கூடும். (கொலோசெயர் 4:12) பவுல் அவனை "என்னுடனே கூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கும்" என்று அழைக்கிறார். என்று கூறப்பட்டுள்ளதுஏனெனில் அவனும் சிறையிருப்பில் பவுலோடு ஏதாவது ஒரு முறையில் தானாகவே பங்கு கொள்ளுகிறான். கொலோசே நிருபத்தில் கூறப்பட்ட யுஸ்சு எனப்பட்ட இயேசு இங்கு குறிப்பிடப்படவில்லை. இவன், ரோமாபுரியிலிருந்து வந்த கிறிஸ்தவனும், பவுல் மற்றும் அவருடைய ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டவனாயிருந்தும், கொலோசே பட்டணத்திலுள்ள விசுவாசிகளால் அறியப்படாதவனாக இருந்தான் என்பது சரியாக இருக்கும். (கொலோசெயர் 4:12).

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு பிலேமோன் 1.1-25

ஈ. வசனம் 25. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக." "கிருபை" இதற்கான விளக்கத்தை வசனம் 3ல் பார்க்கவும். "உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக" என்றால், ஆளுமை, ஆத்துமா என்று பொருள்படும். (இருதயப் பூர்வமான - உணர்ச்சிகள், மனது, மற்றும் சுய சித்தம் - உன் முழு ஆள் தத்துவம் - கலாத்தியர் 6:18; 2தீமோத்தேயு 4:22) பன்மையில் "உங்களுடைய" என்றால், இந்த ஆசீர்வாதம் கொலோசே சபையில் உள்ள முழு சபையையும் நோக்கிக் கூறப்பட்டது என்று பொருள்படும்.

உ. பரிசுத்த பவுல் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவர்களாக மாறினார்வர்களிடம் (கிறிஸ்துவுக்காக தைரியமான சாட்சியாக இருப்பவர்களிடம்) அப்போஸ்தலனாகிய பவுலுடைய நடத்தையின்படியே, இன்று சபையிலுள்ள விசுவாசிகளும் நடந்து கொள்வார்களானால் நலமாக இருக்கும்:

1. கடந்த காலங்களில் இப்படிப்பட்ட நபர்கள் தவறிழைத்திருப்பார்களானால், அவர்கள் நிமித்தமாக, எச்சமயத்திலும், எவ்விடங்களிலும் பரிசுத்த மன்றாட்டு செய்ய வேண்டும்.

2. கிறிஸ்து நம்மில் அன்பு கூர்ந்தது போல அவர்களை நேசிக்க வேண்டும். (யோவான் 15:12-13)

4. ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு (வசனம் 8-21)

அ. வசனம் 8-9. "ஆகையால் பவுலாகிய நான் முதிர் வயதுள்ளவனாகவும், இயேசு கிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால், நீர் செய்யத்தக்கதை உமக்கு கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தாலும், அப்படிச் செய்யாமல், அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்". பவுலுடைய மன்றாட்டு மூன்று உண்மைகளின் அடிப்படையில் உள்ளது:

1. அன்பு - கிறிஸ்துவின் அன்பு கிறிஸ்துவினுடைய பாசம், இரக்கம், தயவு ஆகிய இப்பண்புகள் பிலேமோனால், எல்லா பரிசுத்தவான்கள் பேரிலும் ஏற்கனவே காட்டப்பட்டது. அறியப்பட்டுள்ளது. எனவே இந்தக் காரியத்திலும் நிச்சயமாக அவ்வாறே வெளிப்படுத்தப்படும். (வசனம் 7)

2. முதிர் வயதுள்ளவன் - இந்நாட்களில் பவுல் வயது சென்றவனாகியிருந்தான். எனவே சரீரப்பிரகாரமான துன்பங்கள் தொடர்ந்து இருந்திருக்கக் கூடும். (2கொரிந்தியர் 12:7-10) ஆதி நாட்களில், சில கிழக்கத்திய நாடுகளில் இக்காலத்திலும், வெள்ளை அல்லது நரைத்த தலையுடைய வயது முதிர்ந்தவர்களிடம் ஞானம் மற்றும் அதிகாரம் இன்னும் இருந்து வருகிறது.

ஆ. 3. இயேசு கிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிற ---- கிறிஸ்துவுக்காக துன்பம் அனுபவிக்கும் விசுவாசிகளை, விசேஷமாக, சுவிசேஷத்தை அறிவிக்க தூர இடங்களுக்கு அனுப்பப்பட்டு வெகுநாட்களாக அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்யும், பரிசுத்தமாக்கப்பட்ட ஊழியர்கள், இன்று அநேக சபைகளில் உயர்ந்த பதவியில் வைக்கப்படுகிறார்கள்

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

ஆகிலும், அவர் தைரியமாக (திறந்த மனதுடன், கபடில்லாமல், நிச்சயத்தோடும், உறுதியோடும் பேசுவது, ஒன்றையும் மறைத்துவைக்காமல்) ஒநேசிமுவுக்கு இரக்கம் காட்டவும், கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டிய, திருடிவிட்டு ஓடிய அடிமையாக அல்ல, கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனாகத் திரும்ப அவனை ஏற்றுக்கொள்ளும்படி பிலேமோனுக்குக் கட்டளையிட்டிருக்கலாம். பவுல், நிச்சயமாக, கிறிஸ்துவுக்குள் ஒரு அப்போஸ்தலனாக அதிகாரத்துடன் பேசுகிறார்.

ஆ. வசனம் 10-12. "--- என் மகனாகிய ஒநேசிமுவுக்காக உம்மை மன்றாடுகிறேன். முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ பிரயோஜனமுள்ளவன் --- அவனை நான் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன். என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும்". சொற்கள், விளையாட்டாக ஒரு சமயம் நகைச்சுவைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். "ஒநேசிமு" என்றால் பயனுள்ளவன், லாபகரமானவன் என்று பொருள்படும். மனந்திரும்புவதற்கு முன்பு அவன் பயனற்றவனாக இருந்தான். ஆகிலும் அவன் மனந்திரும்பின பின் பெயருக்கு ஏற்றாற்போல் பிலேமோனுக்கு பயனுள்ளவனாக வாழ்ந்து காட்டினது மாத்திரமல்லாமல், சுவிசேஷ ஊழியத்தில் பவுலுக்கும் பயனுள்ளவனாக மாறினான். எனவே தீமோத்தேயுவைப்போல் ஒநேசிமுவும்,

1. பவுலுக்கு ஒரு ஆவிக்குரிய மகன் - சுவிசேஷ ஊழியத்தில் கடினமானதாகவும், அபாயகரமானதுமான சூழ்நிலைகளில் அவருடன் சேர்ந்து ஊழியம் செய்தான். மற்றும் நெருங்கிய நீடித்த சம்பந்தத்தைக் காத்துக் கொண்டான். ஒநேசிமு பவுலுடைய ஊழியத்தில் மனந்திரும்பியவன். (வசனம் 1, 1தீமோத்தேயு 1:2,18; 1கொரிந்தியர் 4:17; 2தீமோத்தேயு 1:2, 2:1-6; இவ்வசனங்களில் பவுலுடன், தீமோத்தேயு மற்றும் ஒநேசிமு ஆகியவர்களுடைய தொடர்பு ஒன்றுபோல் இருப்பதைக் காணலாம்)

2. என் உள்ளம் (சொந்த) போலிருக்கிற அவனை (மாதிரியாக) "உள்ளம்" என்றால் உள்ளப்பூர்வமான அன்பும், மென்மையான தயவுள்ள எண்ணங்களும், என்று பொருள்படும். இது பவுல் ஒநேசிமு பேரில் கொண்டிருந்த மிக உன்னத உள்ளான பாசத்தைக் குறிக்கிறது. ஒநேசிமுவைத் திரும்ப அனுப்புவது, அவருடைய சொந்த இருதயத்தையே அனுப்புவது போல் அவருக்கு இருந்தது. (வசனம் 7,20 பார்க்கவும்)

இ. வசனம் 13-14 "--- அவனை என்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தேன். ஆனாலும் நீர் செய்யும் நன்மையைக் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய்ச் செய்யத்தக்கதாக, உம்முடைய சம்மதியில்லாமல் ஒன்றும் செய்ய எனக்கு மனதில்லை". "கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய்" என்றால், மனக்கஷ்டம் எதுவும் இல்லாமல் தன் ஆர்வமாகச் செய்வது என்று பொருள்படும். சுவிசேஷ ஊழியத்தில் (பவுலுடன்) சேர்ந்து உதவி செய்யும்படியாக, ஒநேசிமுவை தன்னுடன் ரோமாபுரியில் தங்கியிருக்கச் செய்வதை, அவர் உண்மையாகவே விரும்புவதாக, பவுல் கூறுகிறார்.

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

ஆகிலும், ரோமாபுரிக்கு அவன் திரும்புவதை குறித்து நிதானித்து தீர்மானம் செய்வது, பிலேமோனுடைய தன் ஆர்வ விருப்பமாகவே இருக்கும். அவனுக்குக் கருணை காட்டும் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர; பிலேமோனை "கட்டாயப்படுத்த" பவுல் மறுத்துவிட்டார். ஒநேசிமுவை தன்னிடத்திற்கு ரோமாபுரிக்கு திரும்ப அனுப்பும்படி பிலேமோனை அவர் "வற்புறுத்துவதற்கு" ஒரு சமயம் இரண்டு குறிப்பிட்ட காரணங்கள் இருக்கக்கூடும்.

1. பவுல் அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

2. கிரேக்க - ரோம உலகத்தில், ஒரு சுதந்திரமான மனிதன், ஒரு ஓடிப்போன அடிமையைக் குறித்து பொதுஜன அதிகாரிகளிடம் அவனைத் திரும்ப அனுப்பிவிடுவது பற்றிய உத்திரவாதத்தை அளித்தபின், அவனை தன்னிடம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம். அந்த அடிமை முன்னதாக சிறிது காலம் தனக்கு உதவி செய்யும்படி தன் விருப்பத்தையும் தெரிவிக்கலாம்.

ஈ. வசனம் 15-16. "அவன் என்றென்றைக்கும் உம்முடையவனா யிருக்கும்படிக்கும், இனிமேல் அவன் அடிமையானவனாக வல்ல அடிமையானவனுக்கு மேலானவனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவு மிருக்கும்படிக்கும் கொஞ்சக்காலம் உம்மைவிட்டுப் பிரிந்து போனான் போலும் ---". இங்கு இரண்டு காரியங்கள் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. பிலேமோனைவிட்டு, ஒநேசிமு பிரிந்து செல்லும்போது, அது "கொஞ்சக்காலம்" மற்றும் "ஒரு அடிமையாக" சென்றான்.

ஆகிலும் அவர் (பிலேமோன்) அவனை "என்றென்றைக்கும்" (நித்தியமாக) இருக்கும்படியாகவும், "பிரியமுள்ள சகோதரனாகவும்" (கிறிஸ்துவுக்குள்) திரும்ப பெற்றுக்கொள்ளப் போகிறார். அடிமையாகிய ஒநேசிமுவை இழந்து போவதற்குப் பதிலாகக், கொஞ்சக்காலம் பிரிந்திருந்ததினால், பிலேமோனுடன், (தேவனுடைய இராஜ்ஜியமும்) அதிக நன்மையை பெற்றுக் கொண்டார். இந்த சூழ்நிலை மற்றும் சந்தர்ப்பம் முழுவதிலும் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்ததாகவும் பவுல் குறிப்பிட்டுக்கூறுகிறார்.(அதாவது, "இதுவே ஒரு சமயம் காரணமாகஇருக்கக் கூடும்")

உ. வசனம் 17-19. "ஆதலால், நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால் என்னை ஏற்றுக்கொள்வதுபோல் அவனையும் ஏற்றுக்கொள்ளும். அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும், உம்மிடத்தில் கடன் பட்டதும் உண்டானால், அதை என் கணக்கில் வைத்துக்கொள்ளும்." "ஐக்கியமானவனென்று" என்றால் அவரோடு பங்குள்ளவன், சுவிசேஷ ஊழியத்தில், கிறிஸ்துவுக்குள் அவரோடு உடன் ஊழியன், என்று பொருள்படும். இது தொழில் துறையில் எல்லா நோக்கிலும் சரிசமமாக எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வது என்று பொருள்படும், ஒரு வியாபாரச் சொல். "என்னை ஏற்றுக் கொள்வதுபோல் ஒநேசிமுவையும் ஏற்றுக்கொள்ளும், என்றால் உம்முடைய சிநேக பந்தத்துக்குள் என்னை ஏற்றுக்கொள்வது போலவே ஒநேசிமுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது அனுமதியும் என்று பொருள்படும்.

ஊ. "அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும், உம்மிடத்தில் கடன் பட்டதும் உண்டானால்" அவனுடைய எஜமானனுக்கு வேலை செய்வதை ஒழித்துவிட்டு, ஓடிப்போன ஒநேசிமுவைக் குறித்து ஒரு சமயம் கூறப்பட்டிருக்கலாம். இது, பெரிய பட்டணத்திற்கு, தன் கடமையைச் செய்வதை விட்டு ஓடிப்போவதற்கு முன், ஒநேசிமு தன்னுடைய எஜமானிடமிருந்து திருடியவற்றையும் குறிக்கும். (வசனம் 19) "அதை என் கணக்கில் வைத்துக்கொள்ளும்".

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு பிலேமோன் 1.1-25

இது மற்றொரு வியாபாரச் சொற்தொடர். அவனால் எடுத்துக் கொள்ளப்பட்ட தொகையை என் கணக்கில் சேர்த்துக்கொள். கடனாக சுமத்து அல்லது பற்றாகக் குறி என்று பொருள்படும். ஒநேசிமுவால் திருடப்பட்டவற்றின் தொகையை திரும்பச் செலுத்துவதாக வாக்குக் கொடுத்ததின் மதிப்பை அதிகமாக்க (சட்டப்படி செல்லும்படி செய்ய) "இதை என் சொந்தக்கையாலே எழுதினேன்" என்று பவுல் அத்துடன் கூட்டிச் சொல்லுகிறார். மார்டின் லூத்தர் இவ்வாறு கூறுகிறார்: "கிறிஸ்துவும் கூட, பிதாவாகிய தேவனிடம் நமக்காக செய்தது போல, பவுலும், ஒநேசிமுவுக்காக, பிலேமோனிடம் மன்றாட்டு செய்கிறார். (லூக்கா 10:34-35; மத்தேயு 25:40) கடன்பட்டதையும், அதைத் திரும்பச் செலுத்துவதையும் விளக்கியபின் பவுல் முடிவாக, "நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென்று, நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லையே" என்று கூறுகிறார். கிறிஸ்துவுக்குள், பிலேமோன் அவனுக்குக் (பவுலுக்கு) கடன்பட்ட அவனுடைய கணக்கு, ஒநேசிமுவுடைய கடனை செலுத்துவதற்கு, பவுல் சேர்த்துக் கொள்ளச் சொல்லிக் கடனாக வைக்கச் சொல்லுவதிலும் அதிகமானதாக இருக்கும்.

எ. வசனம் 20-21. "ஆம், சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜனமுண்டாகட்டும், கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும். நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீரென்று அறிந்து, இதற்கு நீர் இணங்குவீரென்று நிச்சயித்து, உமக்கு எழுதியிருக்கிறேன்." இந்த விளக்கக் குறிப்புகள் பிலேமோனுக்கு மட்டுமே கூறப்பட்டுள்ளது.

"கர்த்தருக்குள் பிரயோஜனமுண்டாகட்டும்", என்றால், சிறிது திருப்தி உண்டாகட்டும், கர்த்தருக்குள் மகிழ்ச்சி அல்லது நன்மை உண்டாகட்டும் என்று பொருள்படும். "கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப் பண்ணும்" என்றால் கிறிஸ்துவுக்குள் என்னுடைய உள்ளப்பூர்வமான அன்பு மற்றும் கருணை நிறைந்த என் உள்ள உணர்வுகளுக்கு ஆறுதல் கொடு என்று பொருள்படும். (வசனம் 7,12) ஒநேசிமுவை அவனிடம் திரும்ப அனுப்புவதற்கும் அவனுக்குக் கருணை காட்டுவதற்கும், பிலேமோனை "வற்புறுத்த" பவுல் விரும்பவில்லை; ஆனால், அவனுடைய மன்றாட்டை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், பவுல் வேண்டிக் கொள்வதை விட அதிகமாகச் செய்வார். (மேலாக, அதற்கு அப்பால், எதிர்பார்த்ததற்கு மேல்) என்று அவன் (பவுல்) "நிச்சயித்திருந்தான்" (உறுதியாக, இணங்கச் செய்வது). இது, பிலேமோன், ஒநேசிமுவுக்கு விடுதலையைக் கொடுத்துவிடுவார் என்று பவுல் நிச்சயமாக இருந்தார் என்பதைக் காட்ட ஒரு சமயம் கூறப்பட்டிருக்கலாம்!

முடிவுரை

அ. ஆகவே பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தின், முன்னுரை, நன்றி கூறுதல், மற்றும் முடிவுரை ஆகிய இவையாவும் ஒநேசிமுவுக்கு அவர் செய்த மன்றாட்டின் முக்கியத்துவத்துக்கு, அழுத்தம் அதிகரிக்க வடிவமைக்கப்பட்டதாக இருக்கிறது. சந்தேகத்திற்கு இடமின்றி, ஒநேசிமுக்கு இரக்கம் காண்பிக்கப்பட்டு, பிலேமோனுடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், கொலேசே பட்டணத்து விசுவாசிகளின் ஐக்கியத்தில், கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனாக அங்கீகரிக்கப்பட்டான். அடிமைத்தனத்திலிருந்து அவனுக்கு விடுதலை கிடைத்திருப்பதும் சாத்தியமானதாக இருக்கும்.

ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு
பிலேமோன் 1.1-25

ஆ. பவுலுடைய இந்த மன்றாட்டு, இன்றைய சபைக்கு ஒரு மாதிரியாக நிற்கவேண்டும். மனிதர்களுக்கு விரோதமாக குற்றம் இழைத்தவர்களை, விசேஷமாக மற்றொரு விசுவாசிக்கு விரோதமாகக் குற்றத்தில் ஈடுபட்டவர்களை, கிறிஸ்துவண்டை வழி நடத்தும்போது, விசுவாசிகள் இம்மாதிரியான மன்றாட்டை அவர்களுக்காக செய்வார்களேயானால் அது அதிக நன்மையாக முடியும்! உண்மையாக இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்காக வாழும் மனந்திரும்பின குற்றவாளிகளை, விசுவாசிகளின் ஐக்கியங்கள் அங்கீகரிக்க வேண்டும்.